# BSNL ஊழியர் சங்கம்
# தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:76** **தேதி:-14.11.2015**

## மாநில அளவில் WORKS COMMITTEE மற்றும் இதர செய்திகள்

அன்பார்ந்த தோழர்களே,

மாநில அளவில் WORKS COMMITTEEகளை அமைக்க வேண்டும் என ஊழியர் தரப்பு வைத்த கோரிக்கையினை சாதகமாக பரிசீலிப்பதாக 2015 மே மாதம் 14ஆம் தேதி நடைபெற்ற 32ஆவது தேசிய கவுன்சில் கூட்டத்தில் அதன் தலைவர் உறுதி மொழி கொடுத்திருந்தார். உறுதி மொழி கொடுத்து ஆறு மாத காலம் கடந்த பின்னும் இதுவரை எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதன் அடிப்படையில் மாநில தலைமை பொது மேலாளர்களுக்கு மாநில அளவில் WORKS COMMITTEEகளை உருவாக்க தேவையான உத்தரவுகளை பிறப்பித்திட வேண்டுமென நமது மத்திய சங்கம் DIRECTOR(HR) அவர்களுக்கு கடிதம் எழுதியுள்ளது.

**தனியார் நிறுவனங்களின் கோரிக்கைகளை ஏற்கTRAI மறுப்பு:-** வாடிக்கையாளர்களின் அழைப்புகள் இடையில் துண்டிக்கப்பட்டதென்றால் தொலைப்பேசி நிறுவனங்கள் அவர்களுக்கு நஷ்ட ஈடு வழங்க வேண்டும் என TRAI ஏற்கனவே முடிவு செய்துள்ளது. இதனால் வருடத்திற்கு 54,000 கோடி ரூபாய்கள் செல்வாகும் என்பதால் அவர்களுக்கு பெரிய நிதிச்சுமை ஏற்படும் என கூறி அந்த முடிவை மறு பரிசீலனை செய்ய வேண்டும் என தனியார் தொலை தொடர்பு நிறுவனங்கள் கேட்டிருந்தனர். எனினும் TRAI, அவர்களின் கோரிக்கையை நிராகரித்து விட்டது. பொருளாதார சுமை என்பது காலாண்டிற்கு 200 கோடி ரூபாய்க்கு குறைவாகவே வரும் என்றும் அது அவர்களின் மொத்த வருவாயில் 1%க்கும் குறைவாகவே வரும் என்றும் அது கூறியுள்ளது.

**4 தனியார் நிறுவனங்களும் BSNLம் மட்டுமே இருக்க வேண்டும்-** சுனில் மிட்டல்:- ரிலையன்ஸ் நிறுவனம் MTS நிறுவனத்தை இணைத்துக் கொள்வது என்பது தொலை தொடர்பு துறையில் ஒன்று படுதல் என்கின்ற நிலை உருவாக தொடங்கி உள்ளது. ரிலையன்ஸ் ஜியோ நிறுவனத்தின் நுழைவின் காரணமாக மேலும் பல இணைப்புகள் ஏற்படும் என ஏர்டெல் நிறுவனத்தின் தலைவர் சுனில் மிட்டல் பார்தி தெரிவித்துள்ளார். அவர் சிறிய நிறுவனங்களை பெரிய நிறுவனங்கள் விழுங்கி விடும் என்று பொருள் பட கூறியுள்ளார். இந்திய தொலை தொடர்பு துறையில் 4 தனியார் நிறுவனங்களும், அரசுத்துறை நிறுவனமான BSNLம் இருப்பது தான் பொருத்தமான சூழலாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். இந்திய தொலை தொடர்பு தொழிலில் ஒரு பொருத்தமான சூழல் நிலவுவதற்கு, BSNL இருக்க வேண்டியது அவசியம் என மிகப்பெரிய தனியார் தொலை தொடர்பு நிறுவனத்தின் தலைவரே கூறியுள்ளது கூர்மையாக கவனிக்க வேண்டிய ஒன்று

**ப்ராட் பேண்டில் BSNL புதிய தொழில் நுட்பத்தை புகுத்துகிறது:-** BSNLன் CMD திரு அனுபம் ஸ்ரீவத்சவா வெளியிட்டுள்ள ஒரு பத்திரிக்கை குறிப்பில் G.FAST, VECTORED VDSL உள்ளிட்ட புதிய ப்ராட்பேண்ட் தொழில் நுட்பங்களை BSNL விரைவில் அறிமுகப்படுத்த உள்ளதாக தெரிவித்துள்ளார். குறுகிய அளவு காப்பர் கேபிள்களை பயன்படுத்தி இந்த புதிய தொழில் நுட்பங்கள் மூலமாக 1Gbps அளவிற்கு உயர் வேக DATAக்களை தரமுடியும். இதன் மூலம் தனது மேன்மையான வாடிக்கையாளர்களுக்கு, BSNLஇடம் உள்ள பெருமதிப்பிற்குரிய சொத்தான காப்பர் கேபிள்கள் மூலம் அதி வேக இண்டெர்நெட் டேட்டாக்களை வழங்க முடியும். இதற்காக BTS உள்ளிட்ட BSNLன் இடங்களில் DSLAM போன்ற ப்ராட்பேண்ட் கருவிகளை நிர்மாணிக்க BSNL திட்டமிட்டுள்ளது.

**லுஃப்தான்சா விமானிகளை போராட்டம்:-** உலகின் மிகப்பெரிய விமான சேவை நிறுவனங்களில் ஒன்றான லுஃப்தான்சா, தங்களின் விமானிகளின் போராட்டம் துவங்கிய காரணத்தால் தனது 2000 விமான சேவைகளை ரத்து செய்துள்ளது. இதன் நிர்வாகம் ஊழியர்களின் பணி ஓய்வு பலன்களை குறைத்ததன் காரணமாக விமானிகளின் தொழிற்சங்கமான UFO இந்த போராட்டத்தை தலைமை தாங்கி 06.11.2015 முதல் நடத்தி வருகிறது. இதனிடையே இந்த போராட்டத்தை தடை செய்ய வேண்டுமென லுஃப்தான்சா நிறுவனம் இரண்டு ஜெர்மானிய நீதி மன்றங்களில் கோரியிருந்ததை அந்த நீதி மன்றங்கள் நிராகரித்து விட்டன. உலகமயமாக்கல் காலத்தில் வேலை நிறுத்தம் போன்ற தொழிற்சங்க நடவடிக்கைகள் தேவையில்லை. அதனை தொழிற்சங்கங்கள் நடத்தக்கூடாது என நம் நாட்டில் பல நிர்வாக குருமார்கள் அறிவுறுத்தி கொண்டுள்ளனர் என்பதை இத்துடன் இணைத்து நாம் பார்க்க வேண்டும். தனது உரிமைகளுக்காக ஜெர்மனி போன்ற மிகப்பெரிய பணக்கார நாடுகளில் உள்ள உழைக்கும் வர்க்கத்திற்கு வேலை நிறுத்தம் தவிர வேறு வழியில்லை என்பதை அவர்கள் புரிந்துக் கொள்ள வேண்டும்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுடன்,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**